

## இலங்கையின் நிலை

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வின் படி:

★ 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 27.9% பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்கள்.

★ வயது மற்றும் பாலின பாகுபாடு இன்றி எல்லா சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகலாம்.

★ 94.5% துஷ்பிரயோகிகள் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நன்கு தெரிந்தவர்கள்.

★ 31.1% மான சிறுவர்கள் துஷ்பிரயோகத்தின் போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர்.

★ 15.2% மான சிறுவர்களுக்கு உணவு அல்லது விளையாட்டு பொருட்களை பரிசாக வழங்குவதன் மூலம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

*பிறரிடமிருந்து இருந்து பரிசுகளை வாங்க முன் பலமுறை சிந்தியுங்கள்*

*உங்களை யாரும் துஷ்பிரயோகம் செய்தால் அது உங்கள் தவறல்ல.*

உங்களுக்கு உதவ பலர் இருக்கிறார்கள் என்பதை மறவாதீர்கள். சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை புகார்செய்ய

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை**
1929

**சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் (பொலிஸ்)**
109 அல்லது 011 244 4444

**PEaCE / ECPAT SRILANKA**
011 281 9397 / 071 273 3037
மின்னஞ்சல்: info@ecpat.lk

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு (PEaCE)



# உங்கள் உடல் உங்களுக்கே சொந்தம்

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலில் இருந்து உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு (PEaCE)

## நீங்கள் யார்?

★ 18 வயதுக்கு குறைவான அனைவரும் சிறுவர்கள்.

★ பெரியவர்களை போல் உங்களுக்கு அனுபவமின்மையால் துஷ்பிரயோகிகள் உங்களை சுலபமாக ஏமாற்றலாம்.

★ கண்ணியத்துடன் வாழ்வதற்கும் சுதந்திரமாக வளர்வதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு.

★ உங்களது நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியது அனைவரதும் பொறுப்பு.



★ பூ உங்கள் பலவீனத்தை பயன்படுத்தி துஷ்பிரயோகிகள் உங்களை இலக்கு வைக்கலாம். ஆகவே உங்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அறிந்து வைத்திருங்கள்.

★ பூ உங்களுக்கு தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் உங்களை எவ்வேளையிலும் துஷ்பிரயோகம் செய்யலாம்.

## உங்கள் உடலை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்

★ உங்கள் உடல் உங்களுக்கு மட்டுமே உரியது.

★ யாரும் உங்களை தவறான நோக்கத்தோடு தொட முடியாது.

★ உங்கள் உணர்வுகளை தூண்டும் வகையில் யாராவது தொட்டால் தாமதிக்காமல் நீங்கள் நம்பும் ஒரு பெரியவரிடம் சொல்லுங்கள்.




★ துஷ்பிரயோகிகள் நல்லவர்களை போல பழகி பாசாங்கு செய்து உங்களை துஷ்பிரயோகம் செய்யலாம்.

★ ஒருவரின் செயல் பொருத்தமானதா அல்லது பொருத்தமற்றதா என்பதை அடையாளம் காண்பதன் மூலம் உங்களை நீங்கள் பாதுகாத்து கொள்ளலாம்.

★ உங்களை ஒருவர் கெட்ட எண்ணத்தோடு தொட முயற்சிக்கும் போது 'தொட வேண்டாம்' என்று சொல்லும் உரிமை உங்களுக்கு உண்டு.

★ உங்களுக்கு நெருங்கிய நண்பரோடு அல்லது வேறு யாருடனும் இருக்கும் உறவில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக நீங்கள் நம்பும் ஒரு பெரியவரிடம் சொல்லுங்கள்.

## சிறுவர் துஷ்பிரயோகத்திற்கும் சுரண்டலுக்கும் உள்ள வித்தியாசம்

★ ஒருவருடைய செயல் ஒரு பிள்ளைக்கு தீங்கு விளைவிக்குமானால் அது சிறுவர் துஷ்பிரயோகம்

★ துஷ்பிரயோகம், புறக்கணிப்பாகவோ அல்லது உடல், உள, பாலியல் ரீதியாகவோ இருக்கலாம்.

★ சிறுவர் பாலியல் துஷ்பிரோயோகமும் ஒரு வகையான சுரண்டல்

★ ஒரு பிள்ளைக்கு ஏதேனும் பொருளையோ பணத்தையோ அல்லது ஆசையையோ காட்டி அப்பிள்ளையை பாலியல் நோக்கத்திற்காக பயன் படுத்துவது சிறுவர் பாலியல் சுரண்டல் எனப்படும்.



★ சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) கூற்றுப்படி, பாலியல் ரீதியாக சுரண்டப்படும் ஒரு மில்லியன் நபர்களில் 21%, 18 வயதுக்குட்பட்ட சிறார்கள்.

★ நிகழ்காலத்தில் கடத்தப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை 5.5 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

★ கடத்தப்பட்ட சிறுவர்கள் துஷ்பிரயோகம், வன்முறை, சுரண்டல், பாலியல் தொழில், கட்டாய திருமணம், யாசகம் போன்றவற்றினால் பாதிக்கப்படுவதாக ECPAT UK கூறுகிறது.